[1972 மார்ச் 11

நாடகக் கலையை வளர்க்கும் முயற்சி இருந்தால் அப்படித் தேர்ந்தெடுக்கமுடியும். நாடகக்கலை வளர்ச்சியடையாத நிலையில் பள்ளிகளில் படித்துவிட்டு பயிற்சிபெறுபவர்களிடம் இருந்து நடிகர்களை ஒரு நாடு தேர்ந்தெடுத்துவிட முடியாது. நம் நாட்டு பழக்கப்படி நாடகக்கலைக்கு மெருகு ஏறினால்தான்—அதிலிருந்து தான் நல்ல நடிகர்களை திரைப்பட உலகத்திற்கு தேர்ந்தெடுக்க முடியும், அப்படித்தான் எடுக்கிறார்கள். அந்த வகையில் நாடகக் கலைக்கு என்னென்ன வகையில் ஊக்கம் தரமுடியுமோ அப்படி நாடகக் கலை வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கப்பட்டு வருகிறது.

திரு. எ. சுவாமிதாஸ் : புதிய நடிகர்களுக்கு வாய்ப்பு அளிப்பதற்காக நடிப்புத்துறையில் ஈடுபட்டுள்ள வயதான நடிகர்களுக்கு வயதுவரம்பு கட்டுவதற்கு, கட்டாயமாக வயது வரம்பு வைப்பதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நடிப்புத் துறையில் இன்ன வயதுதான் இருக்கவேண்டும் என்பதல்ல. 97 வயது உடையவர்கள் கூட சிறந்த நடிகர்களாக இருக்கிறார்கள். பாத்திரத்திற்கு ஏற்ற பொருத்தம் இருக்கிறதா, அதற்கான திறமை இருக்கிறதா, மக்கள் மதிக்கிறார்களா, மக்களின் மதிப்பைப் பெற்றிருக்கிறார்களா, மக்கள் உள்ளங்களில் தங்கியிருக்கிறார்களா என்பதுதான் முக்கியமே தவிர வயதுக்கு உச்சவரம்பு கட்டுவது என்பது இந்தத் துறையைச் சரியாக அறியாதவர்கள் சொல்லும் கூற்றே தவிர அறிந்தவர்களாக இருந்தால் அப்படிச் சொல்ல மாட்டார்கள்.

முதியோர் கல்வித் திட்டம்.

*429 வினா—திரு. எம். முத்தையா : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராமப்புறங்களில் முதியோர் கல்வித் திட்டத்தை விரிவு படுத்தும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன்: ஆம்.